**ஜூலை– 04**

# TNPSC துளிகள்

- தற்போதைய பனாமாவுக்கான இந்தியத் தூதராக இருக்கும் ரவி தாப்பர் (IFS : 1983), கோஸ்டாரிக்கா குடியரசின் அடுத்தத் தூதராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- மத்திய ரிசர்வ் பாதுகாப்புப் படையானது, ஜம்மு காஷ்மீர் மக்களுக்காக 'Madadgaoor Helpline' என்ற சேவையை துயரத்தில் உள்ளவர்களுக்கு உதவுவதற்காக அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் நோக்கம் உள்ளூர் மக்களுக்கு உடனடியாக உதவுவது ஆகும்.
- மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் பிரச்சனைகளைக் களைய மத்திய நீர்வளத்துறை அமைச்சகம் காவிரி நதிநீர் மேலாண்மை வாரியத்தை அமைத்துள்ளது. இதன் முதல் கூட்டம் புது தில்லியில் மத்திய நீர் ஆணையத்தில் ஜூலை 2-ல் நடைபெற்றது.
    - இந்தக் கூட்டமானது மத்திய நீர்வளத்துறை அமைச்சகத்தால் நியமிக்கப்பட்ட மத்திய நீர் ஆணையத்தின் தலைவர் எஸ்.மசூத் ஹுசைன் தலைமையில் நடைபெற்றது. இவர் இந்த வாரியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா மாநிலங்களின் நீதிமன்றமான ஹைதராபாத் உயர்நீதிமன்றத்திற்கு நீதியரசர் தோட்டத்தில் பாஸ்கரன் நாயர் ராதாகிருஷ்ணன் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சத்தீஸ்கர் மாநில உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக தற்பொழுது பணியாற்றுகிறார்.
- அமெரிக்காவின் ஜனநாயக தேசியக் குழுவின் (Democratic National Committee) தலைமை நிர்வாக அதிகாரியாக இந்திய-அமெரிக்கர் சீமா நந்தா நியமிக்கப்பட்டுள்ளார். ஜனநாயக தேசியக் குழுவானது அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சியின் முடிவெடுக்கும் அமைப்பாகும்.
    - அமெரிக்காவின் முக்கிய அரசியல் கட்சியின் செயல்பாட்டுத் தலைவராக இந்திய அமெரிக்கர் நியமிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- சென்னையைத் தலைமையாகக் கொண்டு செயல்படும் யுனிடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் (United India Insurance Company) கே.பி.விஜய் சீனிவாஸ்-ஐ இயக்குநர் மற்றும் பொது மேலாளராக நியமித்துள்ளது. இவர் இப்புதிய பதவியில் நியமிப்படுவதற்கு முன்பு நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனியின் முதன்மை சந்தைப்படுத்தலுக்கான அதிகாரி மற்றும் பொது மேலாளர் பதவியை வகித்தார்.
- நாட்டின் முதலாவது 'காதி மால்' (Khadi Mall) ஜார்க்கண்ட் மாநிலத்தில் விரைவில் தொடங்கப்படும் என்று அம்மாநில முதல்வர் சிளம் ரகுபர் தாஸ் அறிவித்துள்ளார்.
- டெல்லி மற்றும் மாவட்டங்களின் கிரிக்கெட் சங்கத்தின் புதிய தலைவருக்கான தேர்தலில் மூத்த பத்திரிக்கையாளர் ராஜாத் சர்மா, தன்னை எதிர்த்து போட்டியிட்ட உலக கோப்பையை வென்ற இந்திய கிரிக்கெட்டர் மதன் லால்-ஐ விட 517 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.
- வணிக வரி அலுவலகத்தில் சரக்கு மற்றும் சேவை வரி (GST - Good and Services Tax) தின கொண்டாட்டத்தின் போது 'உங்கள் படிகளில் வணிக வரி' எனும் புதிய திட்டத்தை உத்தரப் பிரதேச மாநில அரசு ஜூலை 1, 2018 அன்று அறிமுகப்படுத்தியது. இத்திட்டம் ஜூலை 1 முதல் ஆகஸ்ட் 31, 2018 வரை செயல்படும்.

# தேசியச் செய்திகள்

## இடஒதுக்கீட்டில் இராஜஸ்தானின் தெளிவுரை

- இராஜஸ்தான் அரசு மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பின் (MBC-MOST BACKWARD CLASS) கீழ் உள்ள குஜ்ஜர்ஸ் உள்பட 5 பிரிவினருக்கு இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பின் (OBC-OTHER BACKWARD CLASS) கீழ் கல்வி நிறுவனங்கள் மற்றும் மாநிலத்தில் அரசாங்க வேலைக்கு ஆள்சேர்ப்பு ஆகியவற்றில் 21% இட ஒதுக்கீடு அளிப்பதைத் தெளிவுபடுத்தியது.
- மிகவும் பிற்படுத்தப்பட்ட 5 வகுப்புகளாவன :
    - பஞ்சாரா/பால்டியா/லபானா
    - காடியா/லோகர்/காடால்யா
    - குஜ்ஜர்/குர்ஜர்
    - ராய்கா/ரேபாரி
    - கடாரியா (காடரி)

ஆகியவை ஆரம்பத்தில் 1994-ல் ஒபிசி வகுப்பில் பட்டியலிடப்பட்டது.

- மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் உள்ள 5 பிரிவுகளின் விண்ணப்பதாரர்கள், பொதுப் பிரிவின் கீழ் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படவில்லை எனில் முதலில் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவின் (21%) கீழ் கருதப்படுவர். அதன் பின்னர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பின் கீழ் (1%) கருதப்படுவர்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## தேசியக் கடல்வழி தேடுதல் மற்றும் மீட்புக்கான விருது

- மஹாராஷ்டிராவின் பால்கர் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர் மிலன் சங்கர் தாரே இவ்வாண்டுக்கான தேசியக் கடல்வழி தேடுதல் மற்றும் மீட்புக்கான விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- மே 2018 ல் சிவ்னேரி என்று பெயரிடப்பட்ட மீனவப் படகு மூழ்கும் போது அதில் இருந்த 12 நபர்களை இவர் காப்பாற்றினார்.
- தேசியக் கடல்வழி தேடுதல் மற்றும் மீட்புக்கான விருது தேசியக் கடல்வழி தேடுதல் மற்றும் மீட்புக் குழுவால் நிறுவப்பட்டது.

# விளையாட்டுச் செய்திகள்

## ஹாக்கி சாம்பியன்ஸ் கோப்பை 2018

- 2018 ஆம் ஆண்டு நெதர்லாந்தின் பிரெடாவில் ஹாக்கி சாம்பியன்ஸ் கோப்பைக்கான 37 வது மற்றும் கடைசி இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியா இந்தியாவை வீழ்த்தியது.

- ஆஸ்திரேலியா 1983, 1984, 1985, 1989, 1990, 1993, 1999, 2005, 2008, 2009, 2010, 2011, 2012, 2016 ஆகிய ஆண்டுகளில் சாம்பியன் கோப்பைப் பட்டத்தை வென்றது. தற்போதைய வெற்றியின் மூலம் 15-வது முறை சாம்பியன் பட்டத்தைப் பெற்றுள்ளது.
- வரலாற்றில் இரண்டாவது முறையாக இரண்டாவது இடத்தை இந்திய அணி பெற்றுள்ளது.

## 2018 துபாய் கபடி மாஸ்டர்ஸ் கோப்பை

- அஜய் தாகூர் தலைமையிலான இந்தியக் கபடி அணி இறுதிப் போட்டியில் 44-26 என்ற புள்ளிக் கணக்கில் ஈரானை வீழ்த்தி 2018 ஆம் ஆண்டுக்கான துபாய் கபடி மாஸ்டர்ஸ் கோப்பையை வென்றுள்ளது.
- தற்பொழுது நடப்பு உலக சாம்பியனாக இந்தியா உள்ளது. அதே சமயம் தற்பொழுது கபடி மாஸ்டர்ஸ் கோப்பையை வென்றுள்ளது.

## ஆஸ்திரியாவின் கிராண்ட் பிரிக்ஸ்

- ஆஸ்திரியாவில் நடைபெற்ற 2018 ஆம் ஆண்டுக்கான ஆஸ்திரியன் கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் ரெட் புல்லினுடைய மேக்ஸ் வெர்ஸ்டட்டப்பன் வெற்றி பெற்றுள்ளார்.
- பெராரியினுடைய கிமி ராய்க்கோனென் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார்.
- பெராரியினுடைய செபஸ்டெய்ன் வெட்டல் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளார்.
- காரில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக மெர்சிடசின் லிவிஸ் ஹாமில்டன் போட்டியிலிருந்து விலகினார்.

## உலகக் கோப்பை கால்பந்து 2018 ஜெர்மனி வெளியேற்றம்

- நடப்பு சாம்பியன் ஜெர்மனி தென் கொரியாவுக்கு எதிரான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் தோல்வியுற்று போட்டியிலிருந்து வெளியேற்றப்பட்டது.
- தென் கொரியா நாக் அவுட் கட்டத்திற்கு செல்லவில்லை என்றாலும், ஜெர்மனிக்கு எதிரான போட்டியில் வரலாற்றில் முதன்முறையாக வெற்றி பெற்றுள்ளது.
- கடைசியாக நடைபெற்ற 5 உலகக் கோப்பை போட்டிகளில் குழு நிலையில் வெளியேற்றப்பட்ட நடப்பு சாம்பியன்களில் ஜெர்மனி நான்காவது நாடாகும். (பிரான்ஸ் 2002, இத்தாலி 2010, ஸ்பெயின் 2014).
- கடந்த 16 முறை நடந்த உலகக் கோப்பை போட்டிகளில் பங்கு பெற்று 4 முறை சாம்பியன் பட்டம் வென்றுள்ள ஜெர்மனி 1938-லிருந்து நடைபெற்ற போட்டிகளில் இந்தக் கோப்பையில் முதல் முறையாக முதல் சுற்றின் ஆட்டத்திலேயே வெளியேறியது.

# முக்கிய தினங்கள்

## DISHA வாரம்

- மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் (DISHA - District Development Coordination & Monitoring Committee) இரண்டு ஆண்டுகள் நிறைவை அனுசரிக்கும் விதமாக 2018 ஆம் ஆண்டு 25 ஜூன் முதல் 29 ஜூன் வரை DISHA வாரம் கொண்டாடப்பட்டது.
- மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவுக்கு 'DISHA (டிசா) என்று ஊரக மேம்பாட்டு அமைச்சகம் பெயரிட்டுள்ளது
- ஊரக மேம்பாட்டு அமைச்சகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூத்த பாராளுமன்ற உறுப்பினர் (லோக் சபா) இதன் தலைவர் ஆவார்.
- மாவட்டத்தில் உள்ள மற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் (லோக் சபா) அதன் இணைத் தலைவர்கள் ஆவர்.
- DISHA கூட்டத்தைத் தொடர்ந்து சிறப்பாக பணியாற்றியதற்காக ஐந்து மாநிலங்களில் ஒன்றான சத்தீஸ்கர் மாநிலத்திற்கு 'பாராட்டு விருது' வழங்கப்பட்டுள்ளது.
- ஜார்க்கண்ட், கேரளா, மிசோரம் மற்றும் உத்தரகாண்ட் ஆகியவை மற்ற 4 மாநிலங்களாகும்.

- - - - - - - - - - - - - - -